அமைச்சர்கள் பங்கேற்பு! கன்னியாகுமரியில்

கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

குமரி, நவ.6- கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ்த்தேரினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் முரசு கொட்டி துவக்கி வைத்தார்.

முத்தமிழறிஞர், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முன்னாள் தமிழ் நாடு முதலமைச்சர் லைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை நேற்று (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப் பூங்காவில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர்முரசுகொட்டி துவக்கி வைத்தார்கள்.

முத்தமிழ்த்தேர் துவக்க நிகழ்ச்சியில் எழுத்தாளர் கலைஞர் குழுவின் தலைவரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் முரசு கொட்டி துவக்கி வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், “எழுத்தாளர் கலைஞர்” குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் - கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் ”முத் தமிழ்த் தேர்” அலங்கார ஊர்தி தயார் செய்து துவக்கி வைக்கப்பட்டதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வாகனமானது ”எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்” என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை விளக்கும் புகைப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் (LED WALL) அமைக்கப்பட்டுள்ளது.

பேனா வடிவிலான இந்த வாகனத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வானத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள் அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களில் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் நின்று பொதுமக்கள் Selfi எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி - ஒளி அமைப்பும் உருவக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் QR Code Scan செய்து அறிந்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் பாதுகாப்பிற்காக நான்கு புறமும், உள்பகுதியிலும் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மேலும், ஒட்டுநர் அறையில் வாகனத்தினை இயக்கும் போது நான்கு பக்கங்களும் தெரியும் வகையில் திரை அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் (4.11.2023) துவக்கி வைக்கப்பட்ட இந்த அலங்கார ஊர்தியானது கன்னியாகுமரியில் முக்கோணப் பூங்கா பகுதியில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சுற்றுலாப்பயணிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நாளைய தினம் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் வழியாக 30 மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொண்டு 4.12.2023 அன்று சென்னை வந்தடையும். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட வுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத்தொடர்ந்து அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ்த் தேரினை வடிவமைத்த கலை இயக்குநர் குழுவினர் மற்றும் முத்தமிழ்த்தேர் ஓட்டுநர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவித்ததோடு, எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், கலாபிரியா, ப.திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், கவிஞர். சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

நேற்று முன்தினம் (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப்பூங்கா வில் நடைபெற்ற எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி துவக்க விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அகியோர் முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன், எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர் செயலர் மற்றும் சமூகநலத்துறை ஆணையர் திருமதி.வே.அமுதவல்லி. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், உட்பட பலர் உள்ளனர்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை நேற்று முன்தினம் (04.11.2023) கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப்பூங்காவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வ ராஜ் அகியோர் முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள். உடன், எழுத்தாளர் கலைஞர் குழு உறுப்பினர் செயலர் மற்றும் சமூகநலத்துறை ஆணையர் திருமதி.வே.அமுதவல்லி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சி.விஜய தாரணி உட்பட பலர் உள்ளனர்.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோதிராமனின் மகன் மருத்துவர் சூரியநாராயணன் – மருத்துவர் பவித்ரா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வடமட்டம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., நாகை கௌதமன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., மணமக்களின் உறவினர்கள், கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.